(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 98.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2016 செப்தெம்பர் 08, வியாழக்கிழமை, மு.ப. 10.30 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

487/ '16

1.

கௌரவ கனக ஹேரத்,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு இறுதியில் நாட்டிலிருந்த தொழிலற்ற பட்டதாரிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) 2016 ஆம் ஆண்டில் மேற்படி பட்டதாரிகளில் எத்தனை பேருக்கு அரச தொழில் வாய்ப்புகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும்;

(iii) எஞ்சிய பட்டதாரிகள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தொழிலற்ற பட்டதாரிகளை தனியார் துறையின் தொழில் வாய்ப்புகளுக்கு ஆற்றுப்படுத்துவதற்கான ஏதேனும் திட்டம் உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திட்டத்தை இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

643/ '16

2.

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மொனராகல கல்வி வலயத்துக்குரிய, மொ/அலுபொத்த முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்தை 1000 இரண்டாம் நிலை பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்தில் உள்ளடக்குகையில், அதன் ஆரம்பப் பிரிவு பிரிக்கப்பட்டதென்பதையும்;

(ii) 2013 ஆம் ஆண்டில், மொ/அலுபொத்த முஸ்லிம் ஆரம்பப் பாடசாலை எனப் பெயரிடப்பட்டுள்ள மேற்படி பாடசாலைக்கு நிரந்தர கட்டடம் அல்லது தேவையான பௌதீக வளங்கள் உள்ளிட்ட தகுதியான ஆசிரியர்கள் இல்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி ஆரம்பப் பாடசாலைக்கு நிரந்தர கட்டடமொன்றை நிர்மாணிப்பதற்கும் தேவையான பௌதீக வளங்களை வழங்குவதற்கும் மற்றும் தகைமை வாய்ந்த ஆசிரியர்களை நியமிப்பதற்கும் துரிதமாக நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

705/ ’16

3\.

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— போக்குவரத்து, சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை போக்குவரத்துச் சபையின் சில டிப்போக்களில் 2016 மார்ச் மாதச் சம்பளம் 2016 ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி வரையில் செலுத்தப்படாமலிருந்தமை பற்றி அறிவாரா என்பதையும்;

(ii) தமது ஊழியர்கள் அனைவரினதும் 2016 மார்ச் மாத சம்பளத்தை குறித்த திகதியில் முழுமையாக பெற்றுக்கொடுக்க தவறிய டிப்போக்கள் யாவை என்பதையும்;

(iii) எதிர்வரும் காலத்தில் உரிய திகதியில் சம்பளம் பெற்றுக்கொடுக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

733/ ’16

4\.

கௌரவ பிமல் ரத்நாயக்க,— தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் கொழும்பு மாவட்டத்தில்,

(i) பதிவு செய்திருந்த ஊழியர் சேமலாப நிதியக் (EPF) கணக்குகளின் எண்ணிக்கை;

(ii) புதிதாக பதிவு செய்துள்ள ஊ.சே.நி. (EPF) கணக்குகளின் எண்ணிக்கை;

ஒவ்வொரு ஆண்டின் அடிப்படையில் தனித்தனியே யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் புதிதாக பதிவு செய்துள்ள ஊ.சே.நி. (EPF) கணக்குகளின் எண்ணிக்கை;

(i) அரசாங்கத்துக்கு உரித்தான கம்பனிகள்;

(ii) பகுதியளவிலான அரச நிறுவனங்கள்;

(iii) தனியார் துறை;

(iv) கைத்தொழில்துறை;

(v) விவசாயத்துறை;

(vi) சேவைத் துறை;

இற்கு அமைய ஒவ்வொரு ஆண்டின் அடிப்படையில் தனித்தனியே யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

782/ '16

5\.

கௌரவ பந்துல குணவர்தன,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2000 ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டு வரையில், இலங்கை அரசாங்கத்துக்கு கிடைக்கப்பெற்ற வெளிநாட்டு நன்கொடைகளின் ரூபாய்களிலான பெறுமதி, ஒவ்வொரு வருடத்துக்கும் ஏற்ப வெவ்வேறாக யாது;

(ii) 2015ஆம் ஆண்டுக்கான வருடாந்த மதிப்பீட்டில் ஊகிக்கப்பட்ட வெளிநாட்டு நன்கொடைகளின் அளவு யாது;

(iii) 2015ஆம் ஆண்டில் இலங்கை அரசாங்கத்துக்கு கிடைக்கப்பெற்ற மொத்த வெளிநாட்டு நன்கொடைகளின் அளவு யாது;

(iv) 2015ஆம் ஆண்டில் வெளிநாட்டு நன்கொடைகள் குறைவடைந்தமைக்கு ஏதுவாயமைந்த காரணங்கள் யாவை;

(v) 2016 ஆண்டில் எதிர்பார்க்கப்படும் வெளிநாட்டு நன்கொடைகள் தொடர்பில் அனுகூலமானதும் சாதகமானதுமான மாற்றம் எதிர்பார்க்கப்படுகின்றதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

783/ '16

6.

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— உள்நாட்டலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ரஷ்யாவிற்கான, முன்னாள் இலங்கை தூதுவர் திரு. உதயங்க வீரதுங்க மற்றும் அவரது மனைவிக்கு வழங்கப்பட்டிருந்த இராஜதந்திர வெளிநாட்டு கடவுச் சீட்டு இரத்துச் செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், அத்திகதி யாதென்பதையும்;

(iii) இவருக்கும் இவரது மனைவிக்கும் சாதாரண வெளிநாட்டுக் கடவுச்சீட்டு வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனின், அத்திகதி யாதென்பதையும்;

(v) இதற்காக வெளிநாட்டலுவல்கள் அமைச்சினால் குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்கு ஏதேனும் விதப்புரையொன்று வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) ஆமெனின், அக்கடிதத்தை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(vii) இவர்கள் இருவருக்கும் வழங்கப்பட்ட சாதாரண வெளிநாட்டு கடவுச் சீட்டுகளை பெற்றுக்கொள்வதற்கு திரு. உதயங்க வீரதுங்க இலங்கைக்கு வந்தாரா என்பதையும்;

(viii) இன்றேல், இக்கடவுச் சீட்டுகள் யாரால் கையேற்கப்பட்டன என்பதையும்;

(ix) மேற்படி கடவுச் சீட்டுகள் கையேற்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

788/ '16

7.

கௌரவ லக்ஷ்மன் ஆனந்த விஜேமான்ன,— உள்நாட்டு அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலை மாவட்டத்தில், 11 பிரதேச செயலாளர் பிரிவுகளின், நிருவாக நடவடிக்கைகள் இதுவரை பழைய எல்லைகளின்படி நடைபெற்றுவந்ததுடன், 1992 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க அதிகாரத்தைக் கையளிக்கும் சட்டம் மற்றும் 1996.08.02 ஆம் திகதிய 935 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையின்படி புதிய எல்லைகள் அடையாளமிடப்பட்டு வருகின்றதென்பதையும்;

(ii) இதன் மூலம், பதவி ஸ்ரீபுர பிரிவில், 31J சிங்ஹபுர, 31F பழைய மதவாச்சி மற்றும் 31M சமன்புர ஆகிய கிராம அலுவலர் பிரிவுகள் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றன என்பதையும்;

(iii) கோமரங்கடவல பிரிவில், 233C மயிலவெவ கிராம அலுவலர் பிரிவின் ஒரு பகுதியும், சேருவில பிரிவின் ஒரு சில பகுதிகளும் வேறு பிரிவுகளுக்குப் பிரிந்து செல்கின்றதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) பழைய நிருவாகப் பிரிவுகளுக்கமைய திருகோணமலை மாவட்டத்தில் 11 பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருந்த கிராம அலுவலர் பிரிவுகளும் கிராமங்களும் யாவை;

(ii) மேலே (அ)(i) இல் குறிப்பிடப்பட்ட சட்டத்தின் படி எல்லைகளை மீள அடையாளமிடுகையில் வேறு பிரிவுகளுக்குரித்தாயிருந்த கிராம அலுவலர் பிரிவுகள் / கிராமங்கள் யாவை;

(iii) தற்போது செயற்படும் எல்லை நிர்ணய குழுவின் தீர்மானத்தின்படி புதிதாக பிரிவு எல்லைகள் அடையாளமிடப்படுமா;

(iv) ஆமெனில், அதன் அடிப்படை யாது;

(v) இது தொடர்பில் ஒவ்வொரு பிரிவிலும் குடியிருப்போரினது இணக்கம் வினவப்படுமா;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

792/ ’16

8.

கௌரவ டலஸ் அழகப்பெரும,— அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரை கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015.01.10 ஆம் திகதி முதல் இற்றை வரை இலங்கைக்கு முதலீடுகளுக்காக வருகை தந்துள்ள வெளிநாட்டு தொழில்முயற்சியாளர்களின் எண்ணிக்கை மற்றும் முதலீடு செய்துள்ள மொத்தப் பணத்தொகை எத்தனை அமெரிக்க டொலர்கள் என்பதையும்;

(ii) முதலீட்டாளரின் நாடு, வெளிநாட்டு தொழில்முயற்சி நிறுவனம், முகவரி மற்றும் முதலீடு செய்துள்ள பணத் தொகை தனித்தனியே யாதென்பதையும்,

(iii) இலங்கையில் மேற்படி முதலீட்டுக் கருத்திட்டங்கள் அமைந்துள்ள பிரதேசங்கள் மற்றும் முதலீடுகள் தனித்தனியே யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தற்போது அக் கருத்திட்டங்களில் சேவையாற்றுகின்ற இலங்கை ஊழியர்களின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(ii) முதலீடுகளுக்கு முன்னர் தொடர்புடைய முதலீட்டாளர் பெற்றுக் கொடுப்பதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்ட தொழில்வாய்ப்புகளின் எண்ணிக்கைக்கும் வழங்கப்பட்ட தொழில்வாய்ப்புகளின் எண்ணிக்கைக்கும் இடையில் முரண்பாடுகள் இருக்கின்ற அத்தகைய கருத்திட்டங்கள் யாவையென்பதையும்;

(iii) இலங்கையினுள் முதலீடு செய்வதற்கான வசதிகளை பெற்றுக்கொண்டு அல்லது உடன்படிக்கைகள் மேற்கொண்டுள்ள போதிலும், இற்றைவரை தமது கருத்திட்டங்களை ஆரம்பிக்காத முதலீட்டாளர்கள் உள்ளனரா என்பதையும்;

(iv) ஆமெனில், குறித்த முதலீட்டாளருக்கு அல்லது கம்பனிக்கு வழங்கப்பட்டுள்ள வசதிகள் யாவையென்பதையும்;

(v) 2012, 2013, மற்றும் 2014 ஆண்டுகளில் இலங்கையினுள் மொத்த வெளிநாட்டு மூதலீடு தனித்தனியாக எத்தனை அமெரிக்க டொலர்கள் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

800/ '16

9\.

கௌரவ சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) "அண்மையிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை" நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள முல்லைத்தீவு கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) முல்லைத்தீவு கல்வி வலயத்தில் இரண்டு பிரதேச செயலாளர் பிரிவுகள் உள்ளபோதிலும், அப்பிரிவுகளில் அமைந்துள்ள அநேகமான பாடசாலைகள் "அண்மையிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை" நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ளடக்கப்படாது புறக்கணிக்கப்பட்டுள்ளன என்பதை அவர் அறிவாரா?

(இ) (i) மேலே (ஆ) வில் குறிப்பிடப்பட்டுள்ளதன்படி பாடசாலைகளை புறக்கணிப்பதற்கான காரணங்கள் யாவை;

(ii) முல்லைத்தீவு கல்வி வலயத்தில் புறக்கணிக்கப்பட்டுள்ள பாடசாலைகளை "அண்மையிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை" நிகழ்ச்சித் திட்டத்தின் பிரமாணங்களுக்கமைய உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

809/ '16

10\.

கௌரவ சமிந்த விஜேசிறி,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) ஊவா மாகாண சபையின் தற்போதைய முதலமைச்சரின் பிரத்தியேக பணியாட்டொகுதி அங்கத்தவர்களின்,

(i) பெயர்கள் ;

(ii) பதவிகள்;

(iii) கல்வித் தகைமைகள்;

(iv) சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்;

(v) வெளிநாட்டுப் பிரயாணங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பின் அப்பிரயாணங் களுக்காக ஏற்கப்பட்ட செலவு;

வெவ்வேறாக யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி பிரயாணங்களுக்கு மாகாண சபை நிதியம் உபயோகிக்கப்பட்டுள்ளதா என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

814/ '16

11.

கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வன பரிபாலனத் திணைக்களம் அல்லது வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்கத்தினால் நிருவகிக்கப்படாத காடுகள் 2001ஆம் ஆண்டுக்கு முன்னர் பிரதேச செயலாளர் / உதவி அரசாங்க அதிபர் / பிரதேச இறைவரி அலுவரின் கீழ் நிருவகிக்கப்பட்டன என்பதையும்;

(ii) 05/2001 ஆம் இலக்க சுற்றறிக்கையின் கீழ் இந்த அனைத்துக் காணிகளும் காடு பேணலதிபருக்கு ஒப்படைக்கப்பட்டன என்பதையும்;

(iii) அரசாங்கத்தின் அவசர தேவைகளுக்கு அவசியமான காணிகளை 05/2001 ஆம் இலக்க சுற்றறிக்கையிலிருந்து விடுவிப்பதற்காக 02/2006 ஆம் இலக்கத்தின் கீழ் சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டதென்பதையும்;

(iv) அரசாங்கத்தின் அபிவிருத்தித் தேவைகளுக்காக காணிகள் விடுவிக்கப்படுவதை அரச அதிபரின்/மாவட்ட செயலாளரின் தலைமையில் தாபிக்கப்பட்ட குழுவினூடாக மேற்கொள்வதற்காக 02/2006 ஆம் இலக்க சுற்றறிக்கையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) 05/2001 ஆம் இலக்க மற்றும் 02/2006 ஆம் இலக்க சுற்றறிக்கைகளை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

815/ '16

12.

கௌரவ பிரசன்ன ரணவீர,— மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தரத்தில் உயர்ந்த சிறந்த பண்டங்களை பெற்றுக்கொள்ளக்கூடிய நாடாளவிய சந்தைப்படுத்தல் வலையமைப்புடன் கூடிய அரச நிறுவனமாக கூட்டறவுத்துறை இயங்குகின்றதென்பதையும்;

(ii) அனர்த்த நிலைமைகளின் போது பொதுமக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்காக கூட்டுறவுச்சங்கம் பிரதானமான நிறுவனமாக பயன்படுத்தப் படுகின்றதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) கர்ப்பிணித் தாய்மார்களுக்காக செயற்படுத்தப்படுகின்ற "போசாக்கு பொதி" கருத்திட்டம் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாகவும் ஏனைய நிறுவனங்கள் ஊடாகவும் செயற்படுத்தப்படுகின்றதென்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டம் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக மாத்திரம் செயற்படுத்தப்பட்டிருப்பின், இதை விட அதிகமானோருக்கு அனுகூலங்களை வழங்க முடியுமென்பதையும்;

(iii) அதன் மூலம் கூட்டுறவுச் சங்கங்களின் வருமானத்தையும் அதிகரிக்கச் செய்யலாமென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்கின்றாரா?

(ஆ) (i) கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்கள் ஊடாக மேற்படி கருத்திட்டத்தின் கீழ் இன்றளவில் விநியோகிக்கப்பட்டுள்ள உதவிகளின் நிதிசார் பெறுமதி எவ்வளவென்பதையும்;

(ii) அரச தலையீடு மற்றும் முறைசார்ந்த மேற்பார்வையின் கீழ் உள்ள கூட்டுறவு இயக்கத்தின் ஊடாக பெரும் எண்ணிக்கையானோருக்கு அனுகூலங்கள் கிடைக்கும் வகையில் போசாக்கு பொதி வழங்கும் வேலைத்திட்டத்தை நாடாளாவிய ரீதியாக செயற்படுத்தக்கூடிய இயலுமை காணப்படுகின்ற போது, வேறு தனியார் நிறுவனங்கள் ஊடாக அதனை மேற்கொள்வதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

817/ '16

13.

கௌரவ விமலவீர திசாநாயக்க,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கொழும்பு அல்லது அதனை அண்மித்த பிரதேசங்களில் பல்வேறு சேவைகளில் ஈடுபடுத்துவதற்காக சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் படைவீரர்கள் வெளி மாகாணங்களிலிருந்து வரவழைக்கப்படுகின்றார்கள் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இவ்வாறு வரவழைக்கப்பட்டு பல்வேறு சேவைகளில் ஈடுபடுத்தப்படும் சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் படைவீரர்களில் ஒரு சிலருக்கு சம்பளத்திற்கு மேலதிகமாக வாழ்க்கைச் செலவுப்படிக் கொடுப்பனவு செலுத்தப்படுவதென்பதையும்;

(ii) இச்சேவைக்கும் நிலைமைக்கும் நிகராக சேவையில் ஈடுபடுத்தப்படும் மேலும் சில படைவீரர்களுக்கு மேற்படி கொடுப்பனவு செலுத்தப்படுவதில்லை என்பதையும்;

(iii) இதற்கமைய சமமான சேவைகள் மற்றும் சமமான நிலைமையின் கீழ் இப் படைவீரர்கள் சிலருக்கு பாரபட்சம் காட்டப்படுவது அநீதியானதென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) ஆமெனின், இவ்வாறு அநீதிக்கு உள்ளாகின்ற படைவீரர்களுக்கு நியாயமான வாழ்க்கைச் செலவுப்படிக் கொடுப்பனவொன்றை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 2016.03.08 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணைகளினால் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 10.30 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் மற்றும் பி.ப. 1.30 மணி முதல் பி.ப 6.30 மணி வரையும் இருக்குமாக. மு.ப. 11.30 மணிக்கு 7(5) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளை தொழிற்படுமாக. பி.ப. 6.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

ஒதுக்கீடு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 2.

சட்ட ஆணைக்குழு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 3.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 4.

பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 5.

துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீடு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 6.

சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சரும் காணி அமைச்சரும்,— காணி கொள்ளுதல் சட்டத்தின் கீழ் கட்டளை,— (460 ஆம் அத்தியாயமான) காணி கொள்ளுதல் சட்டத்தின் 63 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஊ) ஆம் அத்தியாயத்தின் 2013 காணி கொள்ளல் சட்டத்தின் (நட்டஈடு செலுத்துதல்) ஒழுங்குவிதிகளின் திருத்தம் தொடர்பில் காணி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2016 யூலை 26 ஆம் திகதிய 1977/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.08.26 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 7.

நிதி அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழான உற்பத்தி வரி தொடர்பில் நிதி அமைச்சரினால் விதிக்கப்பட்டு, 2016 மே 26 ஆம் திகதிய 1968/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.08.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 8.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 1),— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் செஸ் வரி தொடர்பில் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2016 யூன் 13 ஆம் திகதிய 1971/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.08.26 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 9.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2),— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் செஸ் வரி தொடர்பில் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2016 யூன் 13 ஆம் திகதிய 1971/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.08.26 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 10.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 3),— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் செஸ் வரி தொடர்பில் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2016 யூன் 28 ஆம் திகதிய 1973/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.08.26 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 11.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 4),— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் செஸ் வரி தொடர்பில் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2016 யூலை 12 ஆம் திகதிய 1975/40 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.08.26 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 12.

பிரதேச அபிவிருத்தி அமைச்சர்,— குறைநிரப்புத் தொகை,— செலவினத் தலைப்பு 147, நிகழ்ச்சித்திட்டம் 01,— † செயற்பாட்டு நடவடிக்கைகள் 2016 ஜனவரி 01 ஆம் திகதியுடன் ஆரம்பித்து 2016 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் நிதி ஆண்டின் பயன்பாட்டுக்காக இலங்கையின் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் ஏற்கனவே அங்கீகரித்துள்ள செலவின எல்லைகளை விஞ்சாத வகையில் அதன் பலதரப்பட்ட செலவீன தலைப்புக்களின் கீழ் எதிர்பார்த்த சேமிப்புக்களை தேசிய வரவுசெலவுத்திட்ட திணைக்களத்தின் செலவீனத் தலைப்பு "வரவுசெலவுத்திட்ட ஒத்துழைப்பு சேவைகள் மற்றும் அவசர நிலைமைகள் செயற்திட்டத்திற்கு" மாற்றிக் கொள்வதற்கும் 2015 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க வரவுசெலவுதிட்ட வகுத்திட்டுச் சட்டத்தின் 6.1 மற்றும் 6.2 ஆம் பிரிவுகளினால் வழங்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு உட்பட்டு இனங்காணப்பட்ட வெளிநாட்டு நிதியளிப்புடன் செயற்படுகின்ற அபிவிருத்தி செயற்திட்டங்களை துரிதப்படுத்துவதற்கு முன்னுரிமை வழங்கி குறைநிரப்பு நிதி ஏற்பாடாக உரிய அமைச்சுக்களுக்கு மாற்றுவதற்கு இயலும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசுக்குச் சொந்தமான வேறு ஏதேனுமொரு நிதியத்திலிருந்து இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் விருப்பின் பிரகாரம், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தினால் நிதியளிப்பு செய்யப்பட்ட ரூபா ஐம்பத்தொன்பது கோடி இருபத்தொன்பது இலட்சத்து இருபத்து ஐந்து ஆயிரங்கள் (ரூ. 592,925,000) தொகையினை விஞ்சாத தொகையொன்றை அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பிரகாரம் ஏற்பாடு செய்து கொள்ள வேண்டுமென பிரதேச அபிவிருத்தி அமைச்சர் பிரேரித்துள்ளார்.

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| தலைப்பு:- | | 147 - பிரதேச அபிவிருத்தி அமைச்சு |
| நிகழ்ச்சித்திட்டம்:- | | 1 - செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் |
| மீண்டெழும் செலவீனம் | - | ரூ. 469,425,000 |
| மூலதனச் செலவீனம் | - | ரூ. 123,500,000 |
| மொத்தச் செலவீனம் | - | ரூ. 592,925,000 |

(ரூபா ஐம்பத்தொன்பது கோடி இருபத்தொன்பது இலட்சத்து இருபத்து ஐந்து ஆயிரங்கள் மாத்திரம்)

**அரச அலுவலர்களுக்கான முற்பண "பீ" கணக்கு**

| | |
|---|---|
| உச்ச செலவீன எல்லை ( உச்ச வரவு எல்லை) | – ரூ 2,000,000 |
| குறைந்த கிடைப்பனவு எல்லை (குறைந்த செலவு எல்லை) | - ரூ. 150,000 |
| உச்ச வரவு நிலுவை எல்லை | - ரூ. 3,500,000 |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

† 2016 ஆகஸ்ட் மாதம் 09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க. 1 ஆம் இலக்க குறைநிரப்பு மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா. 55,000,000.

* 13.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்,— இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய குற்றப் புலனாய்வு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை மறுசீரமைத்தல்,— 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய குற்றப் புலனாய்வு ஆணைக்குழுச் சட்டத்தின் 16 (1) ஆவது உறுப்புரையின் பிரகாரம், ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் அலுவல்களை நிறைவேற்றுவதற்கு அந்த ஆணைக்குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக பணிப்பாளர் நாயகம் ஒருவரை நியமிப்பதற்கும், அப்பதவியை வகிப்பவருக்கு பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படும் சம்பளத்தைச் செலுத்துவதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாலும்;

ஆபத்தை ஏற்க வேண்டிய பதவியான இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய குற்றப் புலனாய்வு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு 2015.02.12 ஆம் திகதி அரசாங்கத்தின் தேவையின் அடிப்படையில் சட்ட மா அதிபர் திணைக்களத்தில் மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் பதவியை வகித்த சனாதிபதி சட்டத்தரணி திருமதி ஏ.ஏ.பீ. தில்ருக்ஷி டயஸ் விக்ரமசிங்கவை நியமனம் செய்ததன் அடிப்படையில், அவருக்கு தனிப்பட்ட வகையில் அமையுமாறு கீழ் குறிப்பிடப்படும் சம்பளம் மற்றும் படிகளை 2015.02.12 ஆம் திகதி முதல் செலுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதாலும்;

அ. மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் பதவிக்குரித்தான மாதாந்தச் சம்பளம் மற்றும் சகல கொடுப்பனவுகள் (தொலைபேசி கொடுப்பனவு, எரிபொருள் கொடுப்பனவு மற்றும் வீட்டு வாடகைக் கொடுப்பனவு தவிர்ந்த); அத்துடன்

ஆ. இலஞ்சம் அல்லது ஊழல் குற்றப் புலனாய்வு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்திற்குரித்தான அமைச்சின் செயலாளருக்கான கொடுப்பனவு, தொலைபேசிக் கொடுப்பனவு, எரிபொருள் கொடுப்பனவு மற்றும் அரசாங்கத்தினால் உத்தியோகபூர்வ இல்லமொன்று வழங்கப்படவில்லையாயின் வீட்டு வாடகைக் கொடுப்பனவு.

அதற்கமைவாக, 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய குற்றப் புலனாய்வு ஆணைக்குழுச் சட்டத்தின் 16 (2) ஆவது உறுப்புரையின் பிரகாரம், இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய குற்றப் புலனாய்வு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம், சனாதிபதி சட்டத்தரணி திருமதி ஏ.ஏ.பீ. தில்ருக்ஷி டயஸ் விக்ரமசிங்கவிற்கு அரச திரட்டு நிதியத்திலிருந்து மேற்குறிப்பிடப்பட்ட மாதாந்த சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளைச் செலுத்த வேண்டுமெனும் பிரேரணை இப்பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 14.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்,— சுயாதீன ஆணைக்குழுக்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்குச் செலுத்தப்படும் ஊதியங்கள் மற்றும் ஏனைய படிகள்,— பத்தொன்பதாவது அரசியல் யாப்புத் திருத்தத்தின் ஊடாக திருத்தப்பட்டவாறான இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பின் 41 (ஆ) உறுப்புரையின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒன்பது சுயாதீன ஆணைக்குழுக்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்குச் செலுத்தப்படும் ஊதியங்கள் மற்றும் எனைய கொடுப்பனவுகளை, குறிப்பிட்ட ஆணைக் குழுக்கள் உண்மையிலேயே அலுவல்களை ஆரம்பித்த திகதியினை மேற்குறிப்பிடப்பட்ட செலுத்துகைகள் அமுலாக்கப்படும் திகதியாகக் கருதி செலுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாலும்:-

(அ) பதவி அதிகாரத்தின் அடிப்படையில் நியமிக்கப்படும் தலைவர்கள் தவிர ஏனைய தலைவர்களுக்கு ரூபா. 100,000/- மாதாந்தக் கொடுப்பனவவையும், ரூபா.10,000/- மாதாந்தத் தொலைபேசிக் கட்டணத்தையும், தனிப்பட்ட பாவனைக்கு உரித்துடைய வகையில் உத்தியோகபூர்வ வாகனமொன்று மற்றும் வாகனத்திற்காக 225 லீட்டர் எரிபொருள் அல்லது சந்தை விலையின் அடிப்படையில் அதற்கு இணையான கொடுப்பனவொன்றைப் பெற்றுக்கொடுப்பதற்காகவும்;

(ஆ) பதவி அதிகாரத்தின் அடிப்படையில் நியமிக்கப்படும் சுயாதீன ஆணைக்குழுத் தலைவர்களுக்கு தமது நிரந்தரப் பதவிக்குரிய சம்பளம் மற்றும் படிகளுக்கு மேலதிகமாக, சுயாதீன ஆணைக்குழுத் தலைவர் ஒருவரின் மாதாந்தக் கொடுப்பனவின் 50% ஐ மாதாந்தக் கொடுப்பனவாகச் செலுத்துவதற்காகவும்;

(இ) இலஞ்சம் அல்லது ஊழல் குற்றப் புலனாய்வு ஆணைக்குழு தவிர ஏனைய சுயாதீன ஆணைக்குழுக்களுக்குப் பதவி அதிகாரத்தின் அடிப்படையில் நியமிக்கப்படாத உறுப்பினர்களுக்கு ரூபா 75,000/- மாதாந்தக் கொடுப்பனவையும், ரூபா 8,000/- மாதாந்தத் தொலைபேசிக் கட்டணத்தையும், தான் வசிக்கும் இடத்திலிருந்து ஆணைக்குழு அலுவலகத்திற்குச் செல்வதற்கான தூரத்தின் அடிப்படையில் 350 கிலோ மீட்டர்கள் வரை ரூபா 25,000/- போக்குவரத்துக் கொடுப்பனவு அல்லது 350 கிலோ மீட்டர்களிலும் அதிகளவு தூரத்திற்கு ரூபா 50,000/- போக்குவரத்துக் கொடுப்பனவையும் செலுத்துவதற்காகவும்;

(ஈ) 2015.06.17 ஆம் திகதிய 3/2015 ஆம் இலக்க அரசாங்க வர்த்தக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய பதவி அதிகாரத்தின் அடிப்படையில் நியமிக்கப்படும் ஆணைக்குழு உறுப்பினர் ஒருவருக்கு ஒரு கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக ரூபா 10,000/- கொடுப்பனவைச் செலுத்துவதற்காகவும்;

(உ) 1994 இன் 19 ஆம் இலக்க இலஞ்சம் அல்லது ஊழல் குற்றப் புலனாய்வு ஆணைக்குழுச் சட்டத்தின் (8) ஆம் உறுப்புரைக்கமைய அந்த ஆணைக்குழுவின் தலைவருக்கு இணையான வகையில் உறுப்பினர்களுக்கும் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ளதனால் அந்த ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு ரூபா 95,000/- மாதாந்தக் கொடுப்பனவையும், ரூபா 8,000/- மாதாந்தத் தொலைபேசிக் கட்டணத்தையும், தனிப்பட்ட பாவனைக்கும் உரித்துடைய வகையில் உத்தியோகபூர்வ வாகனமொன்று மற்றும் வாகனத்திற்காக 170 லீட்டர் எரிபொருள் அல்லது சந்தை விலையின் அடிப்படையில் அதற்கு இணையான கொடுப்பனவொன்றைப் பெற்றுக்கொடுப்பதற்காகவும்;

(ஊ) தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு தேர்தல் ஒன்றுக்கான அறிவித்தல் விடுக்கப்பட்ட திகதி முதல் பெறுபேறுகள் வெளியிடப்படும் திகதி வரையிலான காலப் பகுதிக்காக அவர்களது மாதாந்தக் கொடுப்பனவின் ¾ விசேட கொடுப்பனவொன்றைப் பெற்றுக்கொடுப்பதற்காகவும்; மற்றும்

அதற்கமைய, அரசியல் யாப்பின் 41 (அ) சட்டத்தின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒன்பது சுயாதீன ஆணைக்குழுக்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு மேலே குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் ஊதியங்கள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளைச் செலுத்தவேண்டுமெனும் பிரேரணை இப்பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் இணைக்கப்பட்டுள்ளது)

* 15.

அரசியலமைப்பின் கீழ் பிரேரணை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2016 யூன் 22),— "இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ (5) (அ) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம், தேர்தல் ஆணைக்குழுவினால் 2016 பெப்புருவரி 25 ஆம் திகதிய 1955/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், 2016.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான, மக்கள் தீர்ப்பொன்றுக்கான அல்லது தேர்தலொன்றுக்கான காலக்கெடுவின் போது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்கநெறிகள் அல்லது வழிகாட்டு நெறிகள் அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 16.

பௌத்த அறநிலையங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 17.

தேரவாத பிக்குமார்கள் கதிகாவத் (பதிவு செய்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 18.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவு மற்றும் 14 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2015 பெப்புருவரி 26 ஆம் திகதிய 1903/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

19.

இலங்கை ஆளணி முகாமை நிறுவகம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.